DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.19/2024**

Prosecution witness **PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Suresh Kumar | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(A1 produced. A2 present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **20.04.2026**

**20.04.2026 முதல் விசாரணை** :

1. நான் கேத்தி பாரதிநகரில் குடியிருந்து நிகழ்ச்சிகளுக்கு தேவையான சமையல் பாத்திரங்களை வாடகைக்கு விட்டு தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக கண்டுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2. 15.09.2023ம் தேதி மதியம் சுமார் 2 மணியளவில் நான் மைலானா ஜங்சன் சென்றிருந்த போது அங்கு போலிசார் பரத்குமாரின் இருசக்கர வாகனம் காணாமல் போனது தொடர்பாக விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். போலிசார் அந்த இடத்தை பார்த்து படம் வரைந்தார்கள். மீண்டும் அந்த இடத்தை பார்த்து ஒரு பேப்பரில் எழுதி என்னிடமும் அருகிலிருந்த பால்ராஜ் என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகும்.**) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. வழக்கின் புகார்தாரர் பரத்குமார் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான், நாங்கள் ஒரே ஏரியாவில் தான் குடியிருந்து வருகிறோம். நான் சமையல் பாத்திரங்கள் வாடகைக்கு விட்டு தொழில் செய்து வருவதால் போலிசார் எனக்கு

நன்கு பழக்கம் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்து கொடுத்த அ.சா.ஆ.3ல் என்ன எழுதியிருந்தது என்பது தெரியுமா என்றால் அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். போலிசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது.

2. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து அ.சா.ஆ.3 என் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு போலிசார் சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.04.20 00:10:27 -0200

JUDICIAL MAGISTRATE,
COONOOR.